# BSNLதொழிலாளர் கூட்டணி, சென்னை தொலைபேசி.

## வேண்டுகோள்

அருமை தோழர்களே !

21-01-2009-ல் சங்க அங்கீகாரத்திற்கான நான்காவது தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் தங்களின் மேலான வாக்குகளை எமது கூட்டணியின் ஒன்பது கரங்கள் சின்னத்தில் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். அங்கீகரிக்கப்பட்ட சங்கமான எம்ப்ளாயீஸ் யூனியன் தனது வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றாமல் நமது ஊழியரை ஏமாற்றிவிட்டது. ஊதிய உயர்வு குறித்து நிர்வாகத்துடன் காலத்தே அச்சங்கம் பேச்சு வார்த்தை நடத்தாமல் கோட்டை விட்டதால் நமது ஊழியருக்கு 1-1-2007 முதல் கிடைத்திருக்க வேண்டிய ஊதிய உயர்வு இரண்டாண்டுகால தாமதத்திற்குப் பிறகு இன்னமும் கிட்டவில்லை. மாறாக 3000 I.T.S அதிகாரிகளும் ஆறாவது ஊதியக்குழுவின் மூலம் நல்ல ஊதிய உயர்வினை பெற்று விட்டார்கள். JTO முதல் DE வரை 50000 க்கும் அதிகமான அதிகாரிகளும் ரால் கமிட்டி பரிந்துரை அமுலானதால் ஊதிய உயர்வினை பெற்று விட்டார்கள். மொத்தத்தில் ஊதிய உயர்வின்றி அவதிப்படுபவர்கள் 2.40 லட்சம் அடிமட்ட ஊழியர்கள் மட்டுமே. அதிகாரிகளெல்லாம் ஊதிய உயர்வு பெற்று மகிழவும் ஊழியர்கள் மட்டும் ஊதிய உயர்வு இன்றி வருந்தவும் எம்ப்ளாயீஸ் யூனியன் தான் முக்கிய காரணம். எனவே அதனை எதிர்வரும் தேர்தலில் தோற்கடிப்பதன் மூலமே நமது ஊழியருக்கு விரைவாக ஊதிய உயர்வு கிடைக்கும் சூழல் உருவாகும். நம்மைப் போன்ற இதர பொதுத்துறை நிறுவனங்களில் ஊழியருக்கு ஓராண்டாக இடைக்கால நிவாரணம் ரூ. 5000 முதல் ரூ.10000 வரை மாதந்தோறும் வழங்கப்படுகிறது. நமது ஊழியருக்கு அது கூட இன்று வரை கிடைக்கவில்லை. நிர்வாகம் ஊதிய பேச்சுவார்த்தைக்காக குழு அமைத்து ஓராண்டுக்கும் மேலாகிவிட்டது. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இது குறித்து அக்கறைகாட்டவில்லை ; ஆர்வம் காட்டவில்லை.

இதுவரை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்த போனஸ் தான் நமது ஊழியருக்கு கிடைத்தது. ஆனால் முதல் முறையாக கடந்த ஆண்டை காட்டிலும் இவ்வாண்டு போனஸ் ரூ.3000 குறைந்து விட்டது. முப்பது சதவிகித போனஸ் குறைப்பை எதிர்ப்பின்றி ஒப்புக் கொண்ட எம்ப்ளாயீஸ் யூனியனை தோற்கடித்தால் மட்டுமே ரூ. 10000 குறைந்தபட்ச போனஸாக எதிர்காலத்தில் நமது ஊழியர்கள் பெற முடியும்.

ஐந்து பதவி உயர்வுகளை அதிகாரிகள் 2004 முதல் அனுபவித்து வருகின்றனர். அவர்களுக்கு ஐந்தாண்டுக்கு ஒருமுறை பதவி உயர்வு உறுதி செய்யப்பட்டுவிட்டது. ஆனால் நமது ஊழியருக்கோ எட்டாண்டுக்கு ஒருமுறை என 4 பதவி உயர்வுக்காக துரோக ஒப்பந்தம் போட்டுள்ளது எம்ப்ளாயீஸ் யூனியன். பாரபட்சமான மிகவும் பாதகமான, பயனில்லாத இத்தகைய பதவி உயர்வுக்கு ஒப்பந்தம் போட்டதன் மூலம் ஊழியருக்கு பட்டை நாமம் போட்டு விட்டது அங்கீகரிக்கப்பட்ட சங்கம். காலங்காலமாக SC/ST ஊழியருக்கு இருந்து வரும் ரிசர்வேசன் இப்புதிய பதவி உயர்வு திட்டத்தில் மறுக்கப்பட்டிருப்பது சமூக அநீதியாகும். இதற்கு ஒப்புக் கொண்டதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் SC/ST ஊழியருக்கு பெரும் துரோகத்தை செய்துள்ளது.

கடந்த நான்காண்டுகளாக நமது BSNL நிறுவனத்தின் நிதியாதாரம் படுமோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அதன் வருமானமும் இலாபமும் கூட கணிசமாக குறைந்துவிட்டது. நிறுவனத்தின் விரிவாக்கமும் வளர்ச்சியும் தனியார் நிறுவனங்களின் சதிகாரணமாக முடக்கப்பட்டது. இச்சதியை முறியடித்திட எம்ப்ளாயீஸ் யூனியன் தவறிவிட்டது. NFTE, FNTO, BTEF ஆகிய மூன்று சம்மேளனங்களின் ஒன்றுபட்ட வேலைநிறுத்தத்தால் காப்பாற்றப்பட்ட அரசுபென்ஷனுக்கும் இப்போது ஆபத்து ஏற்பட்டு விட்டது. DOT 15-06-2006-ல் பென்ஷன் உடன்பாட்டுக்கு விரோதமாக உத்தரவிட்டபோதிலும் கடந்த இரண்டாண்டுகளாக இந்த பாதகமான உத்தரவை வாபஸ் பெற ஒரு நடவடிக்கையையும் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் எடுக்காமல் கோட்டை விட்டு விட்டது. NFTE உருவாக்கிய நல்ல மருத்துவ திட்டம் கூட இன்று சீர்குலைக்கப்பட்டு பாழாகி விட்டது. இறந்த ஊழியரது குடும்பத்தாருக்கு கருணை அடிப்படையில் தரப்படும் வேலைக்கும் கடுமையான நிபந்தனைகள் போடப்பட்டன.

மாற்றல் கொள்கை, நடத்தை விதிகள் என்ற பெயரில் நிர்வாகம் ஊழியர் மீது பெருந்தாக்குதலை தொடுத்த போதிலும் அதிலிருந்து ஊழியரை காப்பாற்ற முயற்சிக்காமல் எம்ப்ளாயீஸ் யூனியன் தனது அங்கீகாரத்தை வீணடித்து விட்டது. அதற்கான தண்டனையை எதிர்வரும் தேர்தலில் BSNLEU க்கு தர ஊழியர்கள் தயாராக உள்ளார்கள்.

தேர்வின்றி Sr TOA ஊழியருக்கு EDP சம்பளவிகிதம், TM ஊழியருக்கு TTA பதவி உயர்வு போன்ற எம்ப்ளாயீஸ் யூனியனின் வாக்குறுதிகள் காற்றில் பறக்கின்றன. ஐந்துநாள் வேலை திட்டம் என்பது இன்னமும் நிர்வாகப்பிரிவு ஊழியருக்கு எட்டாக் கனியாகவே உள்ளது.

கடந்த காலங்களில் நிர்வாகம் தொழிற்சங்கங்களை மதித்து ஊழியர் பிரச்சனைகள் மீது சங்கங்களிடம் ஆலோசனை கலந்தது. ஆனால் இன்றோ அது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்தை கிள்ளுக்கீரையாக கருதுகிறது. [illegible] நிர்வாகம் ஊழியருக்கு எதிராக செயல்பட்ட போதும் அதனை தட்டிக் கேட்கும் துணிவின்றி அங்கீகரிக்கப்பட்ட சங்கம் அமைதி காத்தது. அமைச்சரிடமும் நிர்வாகத்திடமும் சரணாகதியாகிவிட்ட எம்ப்ளாயீஸ் யூனியனை எதிர்வரும் தேர்தலில் தோற்கடிப்பதன் மூலமே நமது ஊழியரின் நலன்களையும், BSNL நிறுவனத்தின் எதிர்காலத்தையும் நம்மால் பாதுகாத்திட முடியும்.

BSNL தொழிலாளர் கூட்டணி வெற்றிப் பெற்றால் ஊழியர் நலனையும் நிறுவனத்தின் நலனையும் கண்ணின் மணி போல காத்திடும் என உறுதி கூறுகிறோம். கடும் தாமதத்திற்கு ஆளாகிவிட்ட ஊதிய உயர்வு உடனடியாக பெற்றுத்தரப்படும். அதிகாரிகளுக்கு வழங்கியது போல பாரபட்சம் ஏதுமின்றி 5 பதவி உயர்வுகள் ஊழியர் அனைவருக்கும் ஐந்தாண்டுக்கு ஒருமுறை பெற்றுத் தரப்படும். SC/ST ஊழியருக்கு பதவி உயர்வில் இட ஒதுக்கீடு உறுதி செய்யப்படும். குறைந்த பட்ச போனஸாக ரூ.10000 பெற்றுத் தரப்படும். பங்கு விற்பனை, ஐ.டி.ஐ. இணைப்பு, VRS / CRS திட்டங்கள் தடுத்து நிறுத்தப்படும். பே அனாமலி பிரச்சனை ஊதிய உயர்வுக்கு முன்னதாக தீர்த்து வைக்கப்படும். எளிதான தேர்வு மூலமாக TTA பதவி உயர்வு அனைத்து டெலிகாம்மெகானிக் ஊழியருக்கும் உறுதி செய்யப்படும்.

பணிபாதுகாப்பு, அரசாங்க ஓய்வூதியம், கேடர் சீரமைப்பு திட்டத்தின் காரணமாக Sr TOA, TTA, T.M. கேடர் பதவி உயர்வுகள், ஒரே உத்தரவின் மூலம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கேசுவல் ஊழியரை ஆளெடுப்பு தடைச்சட்டம் அமுலில் இருக்கும் போதே நிரந்தரப்படுத்தியது, தனியார்மயத்தை நெருங்க விடாமல் BSNL நிறுவனத்தை நூறு சதவிகித அரசு நிறுவனமாக தொடரச்செய்தது, உயர்வான மருத்துவ திட்டத்தை அறிமுகப்படுத்தியது, OTBP, BCR, Grade IV பதவி உயர்வுகளை பெற்றுத் தந்தது, பணி ஓய்வுக்கு முன்பாக Grade IV பதவி உயர்வு கிட்டாதோருக்கு ஒரு கூடுதல் இன்கிரிமெண்ட் பெற்றுத் தந்தது உள்ளிட்ட சாதனைப் பட்டியல் நமக்கு சொந்தமானது. எனவே ஊழியர் வாழ்வு மேம்பட - நிறுவனம் பாதுகாக்கப்பட NFTE-BSNL சங்கத்தை தேர்ந்தெடுப்பீர்.

# வாக்களிப்பீர் ஒன்பது கரங்கள் சின்னத்தில்

**12** NFTE

**NFTE-BSNL, NUBSNLW (FNTO), SC/ST EWA-BSNL, BSNLEC, BSNLES, BTU-BSNL, BSNL-WRU, BSNL-PEWA**

| வி.கே.கோபாலன் | எஸ்.லிங்கமூர்த்தி | எம்.கே.ராமசாமி |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

**தேர்தல் பணிக்குழு, சென்னை தொலைபேசி**